உ

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீசுப்பிரமணிய பக்திரஸ கீர்த்தனைகள்.

இது

சீதக்கமங்கலம் ஙா. ஹனுமந்தபாகவதரவர்கள் குமாரி

ஸ்ரீ சுப்புத்தாயி என்கிற

S. P. சுப்பலக்ஷிமி அம்மாளால்

இயற்றப்பட்டு

திருச்சினப்பள்ளி

லாவணி மகா-ா-ஸ்ரீ வேலுப்பிள்ளையவர்களாலும்,

தஞ்சை மானோஜியப்பாதெரு

மகா-ா-ஸ்ரீ C. முநகையா பிள்ளை அவர்களாலும்

பிழையற பரிசோதிக்கப்பட்டு

கும்பகோணம்

"ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ பிரஸ்ஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1922 [அணா 4.

626:417
N22
176925

1080

உ

முருகன் துணை.

ஸ்ரீ சுப்பிரமண்ய பக்திரஸ கீர்த்தனங்கள்.

கணபதி.

1. இராகம்-கேதாரம்-ஆதி-தாளம்.

பல்லவி.

கஜாநனம் சரணம் ஜெய ஜெயா
கஜாநனம் சரணம்.

அநுபல்லவி.

அஜாதி தேவர் பணிந்திடும் பதனே
அகில புவநங்களும் அஷ்ட அங்கஜனே (கஜா)

சரணம்.

பாசாங்குசதரனே வரமருள் பரமதயாபரனே
தேசாருமுருகேச ஸகோதரா திவ்யமங்களஸரூபமனோகர (கஜா)
விக்னநிவாரணனே வரமருள் வெளியிடும் காரணனே
துக்கவாரதிகட்த்திடும் பதனே துயரம்
சுப்பலக்ஷிமி வரையும் அருள் பொருளே. (கஜா)

சரஸ்வதி.

2. இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

சகலகலாவல்லிநீயே சந்ததமும் கிருபை செய்வாயே (சகல)

சரணம்.

வாணிலோக ஜெனனிநீயே வாக்கில் வந்துதவி செய்வாயே
நித்தியகல்யாணி ஸத்யரூபிணி சுப்பலக்ஷிமிஸோதரினி (சகல)

ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

என்னாவுதவறாமல் நற்சொற்கள் மாறாமல்
என்னுள்ளிதடுமாரி யசையாமல் பூவுலகை
யாளுகின்ற மாவாணீ அம்பிகையே
என்னாவில் வாழும்படிக்கிசைந்துவா

3. இத்தனைகேர்வமென்னடா என்ற வர்ண மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பக்தர்களைப்பாது காப்போனே சித்தம்
இறங்கி உற்றதமிழுக்கு உகந்தசீலனே. (பக்த)

அநுபல்லவி.

இத்தருணம் முக்திதரும் பக்த பரிபாலனேநீர் என்
சித்தத்தில் உதித்தெனக்கு பக்திதந்தருளுவீரே. (பக்த)

சரணம்.

அநித்தியமான ஜன்மத்தை ஆவலுடன்
அடைந்து ஆசை வலையில் புகுந்தேனே
நித்தியமதாகி உன்நிர்மல ஜோதிகண்டு
மர்மம் தெரிந்துகொள்ள நித்தியமும் துதிசெய்தேனே
சத்தியமதாகி நிறைந்திட்ட சக்திவேலா
குறைந்துவராமல்பாட பரிந்து சுப்பலக்ஷிமி
சிறந்துபுகழ்ந்துபாடி வரம் தந்த முருகேசா
சிறந்ததமிழைப்பாட அருந்தவம் செய்கிறேனே
இணைந்த கவி யைப்பாட (பக்த)

4. மார்கழி மாதம் திருவாதிரை என்ற வர்ண மெட்டு.

இராகம்-சாதசாமகிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆறுமுகவேலனே அன்பர்க்கநுகூலனே
ஐயன் முருகேசனே
ஜோதிமயமாகவே கியாதி எனக்களிக்கும்
சுப்ரமண்ய வேலனே

சரணம்.

ஆசைவலையில் புகுந்தேனே பாசக்கொடி படர்ந்தேனே
ஐயனே வந்து காரும்
தோஷம் மிகச்செய்தாலும் நேசம் சுப்பலக்ஷிமியை
தூஷிக்காமல் காரும் (ஆறு)

5. அருந்தவப்புதல்வன் என்ற மெட்டு.

இராகம்-பியாகடை,

பல்லவி.

கதிர்வடி வேலவனே உயிருடன் துதிசெப்ப
கருணை என்னசெய்தேனோ கவியைப்பாட
கருணை என்ன செய்தேனோ

அநுபல்லவி.

மரணகாலத்திலென்னை தருணம் காத்தருளுவீரே
ஸ்மரணம் குகாபரணம் சரணம் ரக்ஷணம் கார்க்க (கதிர்)

சரணம்.

தந்தைக்குபதேசம் தான்செய்தசற்குருவே
விந்தையுடனுரைத்த வேல்முருகையனே
சிந்தைமகிழ்ந்து தாஸின் மலர் பாதத்தை துதிக்க
அந்தமுடனேபாட அடியாளும் துணிந்தேனே
இத்திறைதன்னில் சத்திவேல் முருகா
உத்தமர் தனக்கு
புத்தியும் பக்தியும் நித்தியம் துதித்திட
முக்தி சுப்பலக்ஷிமி பக்திக் கிசைந்திடும் (கதிர்)

6. இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஆறுமுகவேலனே அடியார்க்கநுகூலனே
அன்புள்ள வள்ளி லோலனே (ஆறு)

அநுபல்லவி.

தேடிசெந்தமிழ் பாட மோடிசெய்யாமல் காரும்
காடி வாமளித்து பீடிக்காமல் மனதை (ஆறு)

சரணம்.

சந்ததமும் தியானிப்பேன் எந்தன்மேல்க்ருபை
கூர்ந்துசிந்தை கலக்கம் கொள்ளாமல் உந்தன்
சக்தியிருந்தாலல்லோ முக்திவழி கிடைக்கும்
சித்தியளித்திடுவோனே சக்திவடி வேலனே—புத்த
பரிபாலனே பக்தி சுப்பலக்ஷிமி நித்தமும் துதித்திடும் (ஆறு)

7. பாபியோனே என்ற மெட்டு.

இராகம் கேதாரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பச்சைமயிலேறி வரும்பரனே பாலசுப்ரமண்யனே (பச்சை)

அநுபல்லவி.

தேவர் குறைதீர்க்கவந்த சீலனே லோலனே
பாலனே பக்தர்க் கநுகூலனே (பச்சை)

சரணம்.

சக்திகணபதிக்கு தம்பியாய் வந்த எந்தன்
கந்தன் மலர்பாதத்தை நொந்து அடிபணிந்தேன்
தஞ்சமென்று கெஞ்சிவந்த என் மீதில் பக்ஷம்
சுப்பலக்ஷிமி தக்ஷணங் கார்க்கவேண்டி (பச்சை)

8. வையகத்தில் மெய்யதானம் என்ற மெட்டு.

இராகம்-காதகாமகிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிங்காரவடிவேலன் செந்தமிழ்குகந்தவன் (சிங்)

அநுபல்லவி.

உன்னிதமாகவே பன்னிருகையனே
ஓம்ப்ரனவத்துக் குகந்தவன்
ஓதியேஜெகநீதியே விபூதியேநிதானியே (சிங்)

சரணம்.

பக்தர் குரல் கேட்டு முக்தியளித்திடும் சித்திக்கு சிறந்த மூலனே
பாலனே அதிசீலனே கனலோலனே அன்பர்வேலனே எந்தன் (சி)
பார்வதி புத்திரனே பஞ்சாக்ஷரனே
வாஸுகிதக்ஷகரூபனே சத்ருநாசனே
மித்ரர் நேசனே பக்ஷம்
சுப்பலக்ஷிமி தக்ஷணம் கார்க்கவே (சிங்)

9. ஸ்ரீ இராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தன் மலர்பாதத்தை போற்றி செய்மனமே (கந்)

அநுபல்லவி.

கந்தன் மலர்பாதத்தை சிந்தை கலங்கிடாமல்
வருந்தி துதிகள் செய்தால் இருந்த வினைகள் போகும் (கந்

சரணம்-

சங்கரன் பெற்ற பாலனே இங்கிதலோலன்
சதுர்மறையான சீலனே கொங்கலர் பாலன்
சரணம் சுப்பலக்ஷிமி தருணம் காத்தருள் செய்ய
ஸ்மரணம் எந்தநேரமும் வரம் தரவேண்டுமப்பா (கந்)

10 ஏமாடலாடிஞ என்ற மெட்டு

இராகம்-எதுகுலகாம்போதி

பல்லவி.

ஷண்முக நாதனே சக்திவடிவேலனே
முக்திதரும் சீலனே முருகா அருகில் வாரும் (ஷண்)

அநுபல்லவி.

என்ன புண்யம் எந்தனுக்கு காருண்யனே
வாக்கினுல் துதிக்க கர்ம வினையைத்தீர்த்து
இன்ப ஸாகரத்தில் சேர (ஷண்)

சரணம்.

அல்லும் பகலும் உம்மை ஆவலுடன் பாடலுற்றேன் கல்லும்
கவிக்குதவி சொல்லும் துணைபுரிந்து செங்கயற்ற ஜனங்களுக்கு
பங்கமற்று காக்க பக்ஷமுடன் சுப்பலக்ஷிமி
இக்ஷணம் காத்தருளுவீரே (ஷண்)

11. ஏன் இந்தக்கால்தூக்கி என்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

ஆடுமயில் மீதில்நின்றாடும் முருகேசனே அசுரர் குலகாலனே

அநுபல்லவி.

கோடி கோடி பாபத்தை கொட்டியளந்திடாமல்
சிட்டுக்குருவிபோல பொட்டென போக்கடிக்கும் (ஆ)

சரணம்.

அஞ்சியழத்தெரியாமல் சஞ்சல மனம் கொண்டேன்
ஆசைக்குழியில் தள்ளாதே மிஞ்சிப் பதம் பிடித்தேன்
கெஞ்சிடும் பேதைக்கிநீ பஞ்சமாபாவம் போக்குவீர்
தஞ்சம் சுப்ப லக்ஷிமி தாஸனே—அனுதினம்
பஞ்சம் பரக்கடித்து பரமபாதத்தில் சேர (ஆ)

12. இராகம்-கமாஸ்-தாளம்-திருப்புடை.

பல்லவி.

என்முகம் பார்த்தருளய்யா ஈசனே குமர வேலன் அ அ அ அ

அநுபல்லவி.

தன்னம் தனியே விளங்கும் ஸ்வாமிநாதா சரணம் ஐயா (என்)

சரணம்.

குற்றமேவுரையேனே நான் உற்ற சூரஸ்வாமிக்கு நான்
பக்தியுடன் சுப்பலக்ஷிமி சக்திக்கு அருள் புரியும் (என்)

13. நன்னுசுலுகணசேசி என்ற மெட்டு.

இராகம்-வஸந்தா.

பல்லவி.

பாலகணேசன் ஸோதரனே பாக்கியமாம் சம்போ (பால)

அநுபல்லவி.

பக்தர்களை ரக்ஷித்திடும் உத்தமகுணதீரனே (பால)

சரணம்.

நினைந்துநினைந்து நெஞ்சில் பயந்திடாமல் புகழ்ந்து
நிறைந்து செந்தமிழ்பாட வரம் தந்தருளவேண்டும் (பால)
நம்பிராஜனுக்குநீர் அன்பின் மருமகனே இன்பமுடன்
சுப்பலக்ஷிமிக்கிசைந்திடும் வேலவனே (பால)

14. பாரி போவலரா என்ற மெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நடந்துவா மயிலே இந்த நாதியற்ற பாவியைக்காக்க (நட)

அநுபல்லவி.

எனே புகழ்ந்துபாட துணிந்தேனீடேற வேணுமையா (நட)

சரணம்.

காலன் வந்தென்னை கோலம் செய்யாமல்
ஓலமிட்டுநான் மூலே பார்க்காமல்—பக்ஷமுடன்
சுப்பலக்ஷிமி தக்ஷணம் காக்கவோடி (நட)

15. கேளும் கேளும் என்ற மெட்டு,

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

பக்த சிரோன்மணியே எந்தன்—பக்தசிரோன்மணியே
வீர உற்றத்தின் கண்மணியே (பக்)

சரணம்.

வாகனம் மயிலுக்கு பூஷணம் வேணுமென்று
தோதகமாடினீரே அம்பாளுடனே தோதகம்
ஆடினீரே அம்பிகையுடன் தோதகமாடினீரே (பக்)
விபூதிருத்திராக்ஷம் ஓதி ஜபம் செய்வோர்க்கு
பிரீதியுள்ள நாதனே சிவபிரீதியுள்ள நாதனே
கோரும் சுப்ப லக்ஷிமி காருமே (பக்)

16. இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

அஞ்சுவேனே இனிமேல் அய்யன் மேல் பாட (அ)

அநுபல்லவி.

கெஞ்சிமலர்பாதத்தை மிஞ்சிப் பிடித்த பின்பு
வஞ்சகம் செய்திட்டாலும் என் நெஞ்சு கலங்கிடா (அ)

சரணம்.

ஜென்ம சாபல்யமாக சிங்காரவேலவனை
சங்கையில்லாமல் பாட மங்கை மனங்கலங்கி (அ)
முக்தி முருகேசனே நித்தமும் சுப்பலக்ஷிமி
பக்தியுடனே பாடி சக்தியடைவதற்கு (அ)

17. எந்துகு வாடலகிணுடு என்ற மேட்டு.

இராகம்-கமாசு.

பல்லவி

என்னசெய்வேன் வேல்முருகா சிங்காரவேலா (எ)

அநுபல்லவி.

கண்ணால்பாரும் கவலைதீரும் கர்த்தனே சித்தனே
எந்தன் பக்தரக்ஷ வாசகனே (என்)

சரணம்.

சாண்வயற்று கும்பிக்கிரான் வம்புசெய்வேனோ
சந்ததமும் தியானமே சரணம் சிந்தைநொந்து
வந்தெனக்குபந்தபாசம் தீர்த்தருளும் (என்)
பூணாரம் வேண்டாம் பூஷணம் வேண்டாம்
பெண்ஜன்மமும்வேண்டாம் சந்ததமும் சுப்பலக்ஷிமிக்கி
நின்னருளும் தந்தருளும் பனனிருகை வேலவனே (என்)

18. இராகம்-சௌராஷ்டரம்-தாளம்-ரூபகம்

பல்லவி.

வாருமையா வாருமையா வாகன்தோகை மயிலேறி (வா)

அநுபல்லவி.

அண்டந்தன்னில் கண்டுகொண்டேன்
மண்டலத்தை கைகண்ட சீலா (வா)

சரணம்.

சுவாமிமலை நாதரென்பர் ஷண்முகவடிவேலவரென்பர்
பூமிதனில் போற்றுவோர்க்கு பாவிநாமம் பறந்தோடுமே (வா)
என்னேரமும் சரணாவிந்தம் பன்னிருகையனே
என் சொந்தம் அல்லும் பகலும் அவர் பாதம்
கெந்தம் கந்தன் சுப்பலக்ஷிமி சொந்தம் (வா)

19. இராகம்-ஸகானு-தாளம்-சாப்பு.

பல்லவி.

அய்யன் திருவடியை மெய்யாய் பணிந்திட்டோர்க்கு
உண்மை அறிந்து கொள்ளலாம் (அ)

அநுபல்லவி.

ஆலகால விஷத்தை அன்புடனுண்டயீசன்
காலனை உதைத்திட்ட கமலநேத்திரன் சுதன் (அ)

சரணம்.

இவரை பூஜித்தபேர்க்கு இனி ஜன்மம் கிடையாது
ஈசன் பாதமே சரணம்
கிர்த்திகா தேவியாற்கு புத்திரனாய் வந்த சீலன்
பக்தி சுப்பலக்ஷிமிக்கு முக்தியளிக்கும் வேலன் (அ)

20. மாறுபல்க வேரா என்ற மெட்டு.

இராகம்-கேதாரகவுளம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்கை மணவாளனே எந்தன் சங்கீத லோலன் முருகன் (ம)

அநுபல்லவி.

வள்ளி கனவில் பள்ளியில் புகுந்த கள்ள கிழவர்
வேஷம் கொண்ட மங்கை நாயகனே (மங்)

சரணம்.

உமையாள் புத்திரனே ஓங்கார சித்திரனே
உயர்ந்த மயிலுக்கேற்ற பாத்ரனே பக்ஷமுடனே
சுப்பலக்ஷிமிக்கு ஆவியும் சஞ்சீவியும் நீ
அந்தணர்க்கு தந்தருளும் (மங்)

21. இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

கடைக்கண்பார்த்தருள் செய்வீரே கதிர் வேல்முருகா (க)

அநுபல்லவி.

சூரபத்ம குலத்தை வேறுடன் அறுத்தீரே (கடை)

சரணம்.

பாசம் போகதுதித்த நேசரோடுவாசனே
ப்ராகர்ம விமோசனனே உம்மை ஸ்தோத்திரம்
செய்பவர்க்கும் சாயுஜ்ய பதவிக்கும் சூக்ஷம்
சுப்பலக்ஷிமி அரியாளே தீக்ஷிண்யம் தெரியாமல்
நேசன் முருகேசன் காரும் கருணையுடன் (கடை)

22. தயிரைக்கடைந்த என்ற மெட்டு.

ஸ்ரீ இராகம்-தாளம்-ஆதி

பல்லவி.

ஆறுமுகவேலனே வாரும் அடியானைக் கார்க்க (ஆ)

அநுபல்லவி.

நித்திய நின்மல நிராபய நிற்குணனே
சக்தி வடிவேலனே முக்தி முருகேசனே (ஆ)

சரணம்.

கந்தனை துதிப்பதே பாக்கியம் கைகண்ட சிலாக்கியம்
கருணைக்கு அவரே மிக்க யோக்கியம் கசடறுத்த
கவித்துதி செய்வதர்க்கு முக்கியம் அவர் வைராக்கியம்
சுப்பலக்ஷிமிக்கி அவர் சுகிர்த கியானத்தைப்பூட்டி
இன்பசாகரத்தைக்காட்டி இருவினை தனையோட்டி (ஆ)

23. இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சம்போ சங்கர கங்காதர இங்கிதகுண சீலனே
சிங்காரவடிவேலனே எந்தன் மங்கை மணவாளனே (சம்)

அநுபல்லவி.

அயனும் மாலும் தேடிகாணாதை அரியும்க்யானஸ்வரூபனே
எரியும் விஷம் உண்டவர்க்கு நீர் இன்பமுள்ளபாலனே (சம்)

சரணம்.

பங்கஜனை நினைந்த எந்தன் கங்கை குருபாலனே இங்கிதமுடன்
சுப்பலக்ஷிமிக்கி சங்கீதா கவி நேசனே (சம்)

24. ராதாகிருஷ்ணனே என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி தாளம் ஆதி.

பல்லவி.

செங்கண் மாமருகனே தெய்வானைக்கருகனே
என் வினை தீர்க்கும் வேலனே (செ)

அநுபல்லவி.

சங்கரன் பெற்றபாலன் சதுர்மறையானலோலன்
இங்கித குணசீலன் என் வினை தீர்க்கும் நாதன் (செ)

சரணம்.

ஆதியும் ஜோதியும் வேதமும் போதித்து என்னை
நீதி நிலையை அருளுவாய் ஓம்மஜோதியிலிருந்து
சுத்தவெளி பிரந்து நித்தியம் துதிக்கசெய்வீர்
நீதியுணர்ந்தநாதா நிர்மல மோனசீலா பாரும்
சுப்பலக்ஷிமி காரும் பன்னீருகையா (செ

25. இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சிங்காரவேலனே செல்வ சிங்காரவேலனே (சிங்)

அநுபல்லவி.

கதிரவடிவேலனே காருண்ய ரூபனே
பாராண்டபூவிமேல் பாம்புபோல்உழன்றவரே (சிங்)

சரணம்.

பாலசிங்காரனே எந்தன் பாபமனுக்ரகனே
சேயுள் கைகொண்ட சிங்காரவேலனே பாரும்
சுப்பலக்ஷிமி பக்தர் குறைதீர்க்கவோடி (சிங்)

26. செவியானே என்ற மெட்டு.

இராகம்-நீலாம்புரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

காருண்ய புண்ய ரூபனே கர்மத்தைபோக்கும் (கா)

அநுபல்லவி.

நிஜரூபந்தனைகாணமல் நினைந்து நினைந்துருகி (கா)

சரணம்.

மங்கை மணவாள மாயரூபனே மண்டலந்தன்னில்
கண்டகந்தனே நின்றுதுதி செய்தேனே எத்திசையும்
புகழுவோனே சக்தி வடிவேலனே சிவசக்தி வடிவேலனே
எந்தன் முக்தி சுப்பலக்ஷிமி மோக்ஷரூபனே ஒன்பது
கிரமுடன் பதைத்திட்டாலும் அன்புடனே
காத்தருள் புரிய வேண்டும் (கா)

27. பஞ்சவர்ணக்கிளி என்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி

கதிர்வடிவேலவனே கண்டால் வினைகள் போகும்
அருமைபுடனேபாட ஆசைகொண்டேன் மனதில் (கதி)

அநுபல்லவி.

ஆங்கார கோபம் கொண்டு அலையும் ஜனங்களுக்கு
வந்த வினைகள் போக்கி வரம் தந்தருளுவீரே (கதி)

சரணம்.

யானை காட்டி வள்ளியைத் தட்டி பயத்தைக்காட்டி தான்
கேட்ட சத்தியமும் தாலிகட்டினமெய்யும் கள்ளகிழ
வேஷத்தை கபடில்லாத வள்ளிக்கும் சுப்பலக்ஷிமிக்கும்
நீர் சுய ரூபம் தந்திடுவீரே (கதி)

28. ஸல்லோஞைபை என்ற மெட்டு.

இராகம்-காட்டைகுரிஞ்சி-தாளம்-ஆதி.

பல்லவி.

நானேபாட துணிந்தேனே குரு இல்லாமல்
நானேபாட துணிந்தேனே (நா)

அநுபல்லவி.

தப்பு பிழையிருந்தால் செப்பி வரமருளும்
ஓல்பில்லாத சுப்பலக்ஷிமி கவனம் பாட (நா)

சரணம்.

நீ பஜனைபதி பங்கஜாநீ சிங்கார வேலாநீ
சிறைந்த விழிநீ நிறைந்த குணம் நேனுகந்து புகழ்ந்துபாட
மகிழ்ந்து கேழ்க்க சிறந்த தமிழுக்குதவும் (நா)

29. ஸ்வாமி உந்தனைச்சேர என்ற மெட்டு

இராகம்-இந்துஸ்தான்

பல்லவி.

ஸ்வாமி உந்தன்மேல் பாட தன்மை போருமல்
கர்ம வினை வந்தென்னை கலங்கி தயங்குரேனே (ச)

அநுபல்லவி.

இளங்கதிர் போலவே விளங்கவே வடிவேலன் ஈசன் கிருபை
எப்போ செய்வரோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன் (சு)

சரணம்.

திருச்செந்தூர் வேலவரின் தரிசனம் எப்போ காண்பேன்
அருள்கொண்ட சுப்பலக்ஷிமி மலர் கொண்டுதேடுரேனே (சு)

30. நின்னுவின என்ற மெட்டு

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

உம்மைவிட வேறு எனக்கு தெய்வம் உண்டா இவ்வுலகில் (உ)

அநுபல்லவி.

ஏழையெனக்கு கடைக்கண் பார்த்தருள் தீர்ப்பீரே (உ)

சரணம்.

எத்திசைக்கும் எவ்வுயிர்க்கும் பக்த சக்தி வேல்முருகா
உத்தமனுற்பது முக்கோணத்துடனே எடுத்தவேலன் (உ)
எங்கள் குறைதீர்ப்பதற்கும் சங்கரனே சேவிப்போர்க்கும்
மங்கை சுப்பலக்ஷிமிக்கும் இங்கித வரம் அளிக்கும் (உ)

31. இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சின்மயானந்தா குரு தேசிக மனவாளனே சிந்தை மகிழ்ந்து
புகுந்தேன் தேஜோன்மயமாய் திவ்யரூபம் கண்கண்டேனே (சி)

அநுபல்லவி.

சாஸ்வதரக்ஷவாஸா சச்சிதானந்தசர்வேஸா
மாசற்றமுக உல்லாஸா தாஸர்மீதில் அதிவிஸ்வாஸா (சி)

சரணம்.

கர்ப்ப வாசத்திலுதித்தேன் கருவுருவாகி உன் திருவடி
தனைப்பணிந்தேன் தேவனே உந்தன் திருபாதம் பாட
துணிந்தேன் யேகனே இரவனே ரூபத்தில் மன்மதனே
நேசன் சுப்பலக்ஷிமி ஈசன் முருகேசனே (சி)

32. காமனி வினவே இப்புடு என்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம்-ஆதி-தாளம்.

பல்லவி.

வெற்றிவேலுற்றதுணையே உமையாளுக்கு
செல்வ சிங்கார புத்திரனே (வெ)

சரணம்.

அன்பர்க்கின்பந்தரும் தர்மபரிபாலனே சங்கரன்
பெற்றபாலனே இங்கித குண சிலனே (வெ)
கடைக்கண்ணால் பார்த்தருளும் கவலையை தீர்த்தருளும்
பக்ஷமுடன் சுப்பலக்ஷிமியை ரக்ஷிதருளுமையா (வெ)

33. ததமோடி மானே என்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-

பல்லவி.

சுவாமிநாதா சரணம் சரணம் தருணம் காருமே (சு)

அநுபல்லவி.

கதிர் பாலனென்னுயிர் தோழனே காருமையனே
பிறர் நகையாமல் வரம் தந்தருளுவீர்
போற்றி செய்வேன் எந்தன் வேலனே (சு)

சரணம்.

பஞ்சபூதமும் அஞ்சி வாடுதே நெஞ்சிரங்காதோ தஞ்சம்
தஞ்சம் சந்ததமும் வஞ்சகம் செய்யாமல் காரும் கந்த
கருணை கூர்வேலனே வாரும் அய்யனே கோரி
சுப்பலக்ஷ்மி நேசனே (சு)

34. ஜெனனிநினு என்ற மெட்டு.

இராகம்-ஆனந்த-பைரவி.

பல்லவி.

கருணைசெய் வடிவேலா கிருபைவைத்தேனென் மேல்
கருணைக்யானத்தைப்பூட்டி கர்ம வினையை ஓட்டி (கரு)

அநுபல்லவி.

கர்ப்பகமே கண் காக்ஷிக்கருள் பதமே
ஸர்ப்பலாவண்யம் சரண்ய புண்யவானே (கரு)

சரணம்.

கடவுள் நாமம் தரித்தோனே காருண்யவாசன் கமலனயன
ஈசனே வரம் சுப்பலக்ஷ்மிதுயரம் தீருமே சரணம்
கருணைபரி சம்பூரண ப்ரணவனே (கரு)

35. யேரரார என்ற மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா வா செல்வ சிங்கார வேலவனுக்கு வந்தனம்
தந்தேனையா வஞ்சமில்லாமலே தஞ்சமித்தருணம் கார்க்க

சரணம்.

பெறந்தாலும் என்னை தெரிந்தோர் புகழ சிறந்ததமிழ்
சிறந்த தமிழைபாட சீக்கிரம் ஓடி வா வா வா
வர்ணமயிலேறி சொர்னமயமாக சரணம் தந்தேன்
சரணம் சுப்பலக்ஷிமி தக்ஷணம் கார்க்க வா வா வா

36. வரக்காணனே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காப்பி.

பல்லவி

சிங்காரவேலன் எந்தன் சிங்காரவேலன்
மங்கைமணவாளனே செல்வ சிங்காரவேலன்

அநுபல்லவி.

விந்தையுள்ள வடிவேலன் என் சிந்தைதனில் வந்திதிப்பீர்
நிந்தைதனை செய்யாமல் என்னைவந்து காருமே (சி)

சரணம்.

வேலுமயிலும் கைகொண்டோனே நீதிநிறைந்த சீலனே
நேசன் சுப்பலக்ஷிமியோடு வாசம் செய்வோனே (சி)

37. மோசம்பூசேரம்மா என்ற மெட்டு.

இராகம்-ஸாவேரி-தாளம்-திருப்பு.

பல்லவி.

வருவாய் முருகையனே கதிரவடிவேலவனே
அருள்வாய் சிறந்துபாட தருணம் (வரு)

அநுபல்லவி.

மிக்க உதவி செய்வாய் தக்க தமிழ் புகழ
மிக்க பயந்தெனக்கு பக்கதுணையிருப்பாய் (வரு)

சரணம்.

பன்னிரண்டு கையும்வேலும் பாபம் போக்கும் சீலமும்
பக்தரை கார்க்கும் நேசமும் மூடர்களுக்கு பக்தியை
தந்தளித்திட்டு சித் தத்தில் உதித்திட்டு
முக்தி சுப்பலக்ஷிமி பக்தி பரவச்செய்யும் (வரு)

38. சிதம்பர தெரிசனம் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி.

பல்லவி.

திருச்செந்தூர் வேலவரின் தரிசனம் கண்டுகொண்டால்
மரு ஜன்மம் கிடையாதே—சொன்னேன் (திரு)

சரணம்.

மரன்வயற்றில் பிறந்த மங்கை வள்ளியம்மையை
சீர் கொண்டு மணந்திட்ட சிங்கார வேலவரே (திரு)
கதிரவடிவேலவரின் காக்ஷிமகிமை தன்னை
சாக்ஷி சுப்பலக்ஷிமி மோக்ஷமடையவேண்டி (திரு)

39. காமவளம்மீருதே என்ற மெட்டு.

இராகம்-பியாக்.

பல்லவி

வேலா அருள்புரிவாய் கதிர் வேலா அருள் புரிவாய் (வே)

அநுபல்லவி.

சீலன் சிங்காரவடிவேலன் கிருபை செய்குவாய் (வே)

சரணம்

அகிலத்திலும்மை போல அருளுள்ள தெய்வமில்லை
புவனத்தில் சுப்பலக்ஷிமி போற்றும் குமரகுரு (வே)

40. இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி

தேடி வேலவனே நானடி எந்தன் மீதில் அன்புடன்கிருபை
வைத்து இன்பமுடனேகார்க்க சிங்காரவேலனே அங்கமுருகிவாடி

அநுபல்லவி.

ஆடுமயில் மீதில் நின்றாடும் பன்னீருகையா
ஆசைகொண்டேனே பாடகூசாமல் வரம் தாரும் (தே)

சரணம்.

இத்தனைநாள் புத்தியில்லை என் சித்தத்தில் உதிக்கவில்லை
பக்தி சத்திவேல்முருகா நித்திரை கனவுமில்லை உத்தமன்
உரைத்தநேசன் கர்த்தனே கை கண்ட சிவபக்தி
முக்தி சுப்பலக்ஷிமிக்கு சக்தி வேல்முருகையனே (தே)

41. அருந்தவப்புதல்வனே என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-சாப்பு.

பல்லவி.

கதிரவடிவேலவனே உயிருடன் பூஜை செய்ய கருணை என்ன
செய்தேனோ கவியைப்பாட உதவி செய்தருளுவீரே (கதி)

அநுபல்லவி.

மரண காலத்திலென்று தருணம் கார்த்தருளுவீரே
ஸ்மரணம் குகாபரணம் தருணம் கார்த்தருளுவீரே (கதி)

சரணம்.

தந்தைக்குபதேசம் தான் செய்த தனயனே
விந்தையுடன் உரைத்த வேல் முருகையனே
சிந்தை மகிழ்ந்து நேசன் மலர்பதத்தை துதிக்க
அந்தமுடனேபாட அடியேனும் துணிந்தேனே
இத்திறை தன்னில்—சக்திவேல் முருகா
உத்தமர்களுக்கு நித்தசுத்தியும் பக்தி சிரத்தையும்
சக்திக்கிசைத்திடுஞ் முக்தி சுப்பலக்ஷ்மி (கதி)

42. மாயலாடி என்ற மெட்டு.

இராகம் தோடி-ஆதி தாளம்.

பல்லவி.

ஸாமிநாதா சக்தி வேலவா
எந்தன் சித்தம் குளிர்ந்த சீலா (ஸா)

அநுபல்லவி.

ஓங்கார ரூபனே சிங்காரம் செய்துகொண்டு
என் ஆங்காரம் போக்குவீரே (ஸா)

சரணம்.

வள்ளியோடு யேகாந்த பள்ளியறை வீற்றுறங்கும்
துள்ளி யெழுந்து என் சள்ளையை தீர்க்க ஓடி வா வா (ஸா)
ஒன்றும் தெரியாமலே நான் உன்னையே துதிக்கின்றேனே
நேசன் சுப்பலெக்ஷ்மி கிலேசம் அறுக்க ஓடி வா வா (ஸா)

43. ஐயனே கோபால என்ற மெட்டு.

இராகம்–பிலஹரி-தாளம் சாப்பு.

பல்லவி.

சங்கர குணசீலனே சிங்காரவேலன் மங்கை மணவாளனே (சங்)

அநுபல்லவி.

வையகம் தன்னில் மெய்யாய் விளங்கும்
உன்னிதமான சங்கரபாலன் சங்கீதலோலன் இங்கித சீலன் (சங்)

சரணம்.

வையாபுரி வாஸனே கோரிவந்தோர்க்கு செய்யாய் பாபநாசனே
அருள்புரிந்து மந்தபுத்திகொண்டு சிந்தை கலங்கிட்டு நொந்தி
கந்தி வருந்தி துதித்திட்டு செந்தமிழ் பாடும் நேசன்
சுப்பலெக்ஷிமி சிந்தை பூரிக்க வந்த நாதனே (சங்)

44. இராகம்-ஆரபி-அடதாளம்.

பல்லவி.

யேனோ வடிவேலவர் வரக்காணேன்—வந்தேன்
மனது கவலை நீக்கி எனது துயரம் போக்கி (யே)

அநுபல்லவி.

மான்வயற்றில் பிறந்த மங்கை நான் உருகவோ
எங்கு சென்றுரோ அவர் இங்கு வரக்காணேனே (யே)

சரணம்.

சூரபத்ம குலத்தை வேறுடனே அறுக்க தொடர்ந்தங்கே
சென்றுரோ—தோகை மயிலைக்கண்டு வாகனம் செய்துக்கொள்ள
துதித்தங்கே நின்றுரோ—கோலாகலத்துடனே கோபுரத்தில்மேவ
சீலா பரமகுருதேசிகர் அவர் இங்கே (யே)
சூரர் அசுரர்களை காலாலே உதைத்திடும் சுந்தரவடிவுள்ளோனே
பாரில் அன்பர்கட்கு படியளந்திட வென்று பரந்தங்கே நின்றுரோ
இரவும் பகலும் சுப்பலெக்ஷிமிக்கு தெரிசனம் அருமையுடன்
கொடுத்த—அய்யன் முருகர் இங்கே (யே)

45. எந்த டக்குலு என்ற மெட்டு.

இராகம்- பைரவி- தாளம்-ரூபகம்.

பல்லவி.

தோகைமயிலை வாகனம் கொண்ட சக்திவேல் முருகையனே

அநுபல்லவி.

மந்தகாசமாகவே கந்தன் மலர்பாதத்தை
சிந்தை தன்னில் உதித்திட்ட (தோ)

சரணம்.

அக்கினியில் அவதரித்த பாலனே மிக்க
கியாதிகொண்ட மித்திரர்க்கு லோலனே பக்தர்
புகழ்ச்சிக்கி உத்தம சீலனே
வெற்றிவேல் பிடித்திடும் சக்திவேல் முருகனே
பக்தர் மீதில் நேசனே (தோ)

சாந்தகுணம் கொண்ட சதுர்மறை வாசனே
மந்தகாசமாக மனதில் பிரகாசனே
வந்தனம் செய்வோருக்கு கந்தர்ப்ப நேசனே
பக்ஷம் சுப்பலெக்ஷிமி போஷனே-தக்ஷிணாமூர்த்தி ரூபனே
பிக்ஷவேஷம் கொண்டிட்ட (தோ)

46. ஸாரகு மேர கந்தனே என்ற மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி,

பல்லவி.

வருவாய் வடிவேலனே இந்த மானிலம்தன்னில்
எனக்கு நீதியை போதிக்க (வரு)

அநுபல்லவி.

ஞ்யானபிரகாசரென்றும் வீர ஆவேசரென்றும்
சூரூதி சூறரென்றும் சுப்பரமண்ய லோலரென்றும்
ஜோதிமயமாய் விளங்கும் பிரீதியுள்ள நேசனே (வரு)

சரணம்.

தாரணி தன்னில் தான் விளங்கும் கருணையுள்ள முருகையனே
நிரணயமாய் சுப்பலக்ஷிமிக்கு அருள் உதவி செய்விப்போனே
திருவருளை சரணம் மென்றேன் தக்ஷணம் கார்க்க ஓடி (வரு)

47. மோடி சேசே வேலரா என்ற மெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வர்ணமயிலேறிவா பன்னிருகையா. (வர்)

அநுபல்லவி.

காடி உன்னை நான்தேடி வந்தேனே
என்பாடு கேழ்க்க வருவாய் (வர்)

சரணம்-

நாவாலும் மனதாலும் நாடிய த்யானத்தாலும்
வேறு ஒன்றும்இல்லை நீரேகெதி கோரிவந்தேன் (வர்)
உத்ஸாகங் கொண்டுந்தன்மேல் பக்ஷ்டன் பாடினேன்
ரக்ஷித்தருளும் சுப்பலக்ஷிமியை தக்ஷணமே (வர்)

48. அன்னமே உன்னழகை என்ற மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

குமாரகுருவேலனே உருமையுடன் பூஜித்தால் இகபர ஸாதகமே
கந்தன் கருத்துக்குக் கிசைந்திடும் (குமா)

அநுபல்லவி.

இரவும் பகலுமாய் குருபரனைக் காண
இதுவே வழி என்று உறுதிமொழி கொண்டேன் (குமர)

சரணம்.

பக்தி இல்லாதபூஜை எத்தினை செய்திட்டாலும்
முக்தி வழி கிடைக்குமோ மூடர்களுக்கு
அரிதான மானிடப் பிறவி வந்தென்ன பலன்
ஆசை முருகேசனை அருமையுடன் பூஜித்து
இருக்கும் வினைபோக தருக்கம் செய்யவேண்டும்
பொறுக்கமுடியாத இருக்கும் பாபத்தை
உருக்கம் சுப்பலக்ஷிமி சுருக்கம்தான் அறிந்து
கருத்தரிந்த வேல் கருணை புரிந்திடும் (குமர)

49. இராகம்-காதனுமகிரியை-சாப்பு-தாளம்.

பல்லவி.

பாதமே நம்பினேன் பற்றினேன் முருகையனே
பாதமே பொற் (பாதமே)

சரணம்.

ஆறுகுழந்தையும் ஆவலுடனே அணைந்த பார்வதிக்கு கிரந்த
சுதனே ஷண்முகமும் தரித்த ஸர்க்குருவே சரணம்தாமரை (பாத)
முக்தி வழிக்கி நீர் மோக்ஷரூபனே
சக்தி கணபதி தம்பி ஸோதரனே
நேசம் சுப்பலக்ஷிமி தமிழ் பரிபாலனே
ஆவேசம் கொண்டுந்தன் பாதமே குருபரமே (பாத)

50. சாமிராடேமி சேதுனு என்ற மெட்டு.

இராகம்-பியாக்.

பல்லவி.

வேலன் எங்கே சென்றாரோ வடி (வே)

அநுபல்லவி.

பக்தர்களை ரக்ஷித்திட உத்தமன் வரக்காணேனே (வே)

சரணம்.

கானகத்தில் வள்ளியாரை கண்டுவர வேண்டுமென்று
வேகமாக முருகர் அதிவேகமாக
சுப்பலக்ஷிமி தாகம் கொண்டு பாடுகிறாள் (வே)

51. இராகம்-கனடா.

பல்லவி.

வேலாவென்றால் போதும் ஜென்மம் யீடேற (வே)

சரணம்.

வேலன் குமரகுருபாலன் அன்பர்க்கு அனுகூலன்
அடியார் பாபநாசன் உல்லாஸன் யென்று (வே)
சூறன் அஸுரகுல காலன் சுப்பலக்ஷிமி நேசன்
நவரஸ வெங்கிலன் ஸல்லோலன் என்ற (வே)

52. இந்திரஸபா மெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-பியாக்

பல்லவி.

வேலனை தினம் போற்றிசெய்தால் என்னாளும் பயமில்லை (வே)

அநுபல்லவி.

குமரகுருவேலன் கோரிவந்தவற்கு சீலன் எந்தன்
அருமை தெரிந்தருள் செய்திடும் வருமை தீரும்மே (வே)

சரணம்.

அனுதினம் த்யானம் செய்தால் அரும்வினை அகன்றிடும்
பக்ஷமுடன் பாரும் சுப்பலக்ஷிமி குறைதீரும்
என்னை ரக்ஷித்தருளும் தக்ஷணமே சரணம் தந்தேனே (வே)

53. திருச்சடை என்ற மெட்டு.

இராகம்-நீலாம்புரி.

176927

பார்வதிக்கு பாலன்வேண்டி பர்த்தாவை கோபம்கொண்டாள்
பரமசிவனும் அப்போ பார்த்து உரைத்தார்சரவணபொய்கையிலே
ஸ்நானம் பண்ணவந்தேண்டி உருமையுடனே வீர்யம் உண்டாச்சு
நீர்இல்லா ஒடையிலே நிற்கின்ற பள்ளத்திலே
தங்கியிருந்த பாலன் தனிமையாக சுற்றி சோலை இருக்க
சொர்ணகுயில்பரக்க பார்வதி அங்குசென்று பாலா பாலா என்றாள்
பாரஸ்தனங்களிலே பாலும்சொரிந்திடவே பார்வதி கூக்குரலை
பாலர் கேட்டு என்னம்மா தாயே என்று இருமூன்று குழந்தையும்
தாயின் மடியின்மீதில் பால் குடித்தார்—ஆவலுடனே அம்மன்
ஆசையாய் அணைத்ததினால் ஆறுமுகம் ஷண்முகம் ஆச்சே
பக்ஷமுடனே சுப்பலக்ஷிமியை கார்த்திட தக்ஷணம்
கோரிவந்தேன் தயாநிதியே.

54. உளைகோகி யாடபேடா என்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி—சாப்பு தாளம்.

அநுபல்லவி.

சிங்கார வேலவனே நாடி மனம் வாடி
சிவ பக்தர் புகழ்ந்திடும் முக்தி குமாரா (சிங்)

சரணம்.

பக்திரஸம் கைக்கொண்ட நாதா அய்யன்
வெற்றிவேல் கைக்கொண்ட வேல் முருகையன் (சிங்)
பிக்ஷை வேஷம் பழனியாண்டி
சுப்பலக்ஷிமியே ரக்ஷிக்கும் ஸோதரின் தாண்டி (சிங்)

55. காவுமுற கருணாஸகார என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வேலாயுதனே முக்காலும் நம்பினேனே
வந்தேன் கவலை தீர்த்திட (வே)

அநுபல்லவி.

சீலமுடன் வேலவரின் பாதத்தை
நீலமயில் மீதில் ஜோதியாய் விளங்கும் (வே)

சரணம்.

கருணாகர வர மகிமைதன்னை
காக்ஷி சுப்பலக்ஷிமி மோக்ஷம் அடைந்திட
தீக்ஷண்யமாகவே சூக்ஷம் தெரிசனம்
கடாக்ஷம் கைகெண்ட கதிர்வேல் முருகனே (வே)

56. ரொகுமேர ரணதீர என்ற மெட்டு.

இராகம்- பைரவி.

பல்லவி

வருவீரையா முருகய்யனே வாரும்
துயர் தீரும் மையனே (வரு)

அநுபல்லவி.

முத்துக்குமா ஸத்துள்ள தீற
எத்திசை புகழ் சக்தி வேலவ (வரு)

சரணம்.

உரத்தையும் உம்ம தீரத்தையும் கண்டு
வறுத்தை யடைய விர்த்தி செய்யுமே பரமபேதை
சுப்பலக்ஷிமி சிறைந்துபாட மறந்திடாமலே (வரு)

57. எந்துகுநீ போந்து கூர்ச்ச என்ற மெட்டு.

இராகம்-கீர்வாணி தாளம் ரூபகம்.

பல்லவி.

அய்யன் முருகையனே எந்தன் வருமை தீர்த்து அருள்புரியுவீர்

அனுபல்லவி.

பந்தபாசம் நீக்கிஎன்னை பாதம்தன்னிலே சேர்க்கவேண்டி
சிந்தைநொந்துநான் அண்டிவந்தேன் வந்தவினை தீர்த்தருளும் (அ)
சஷ்டிதிதியை அனுஷ்டிப்போர்க்கு கஷ்டவினையின் கருவறுப்பிரே
இஷ்டமுள்ள சுப்பலக்ஷிமி அதிர்ஷ்டம் இப்படிஅல்லயலாமோ (ஐ)

58. வாரும் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-ரூபம்-தாளம்.

பல்லவி.

வாரும் வடிவேலனே வரம்தந்தருள
வாரும் வடிவேலனே (வா)

சரணம்.

கருவருத்து இனி உரு எடுக்காமல்
முருகனைகாண உருகிவாடுறேன் (வா)
சுப்பலக்ஷிக்கு சுயம்ரூபம்—காட்டி இருவினை யோட்டி
உன்பாதம் தனைகாட்டி (வா)

59. இராகம்-காம்போதி.

பல்லவி.

தெரிசனம் கண்டுகொண்டேன் சிங்கார வேலவனை

அனுபல்லவி.

உருகி உருகி அனல் மெழுகுபோல் நான் உழன்று (தெரி)

சரணம்.

கோரி வந்த எனககு நேரேவழி தந்திட்டாறே
பாரும் சுப்பலக்ஷிமியை காரும் பன்னிருகையா (தெரி)

60. மர சுண்டட என்ற மெட்டு.

இராகம்-கானடா.

பல்லவி.

மரப்பேனே உம்மை அனுதினம் நானும் போற்றி செய்வேன்
பாதம் பணிந்தேன் துணிந்தேன் (மர)

அனுபல்லவி.

தாணியர் போற்றும் தீரனே குமரசூரன்
அதிவீரன் காரும் கர்மம் போக்கும் (மர)

சரணம்.

எந்தன் சிந்தைவாடி செந்தமிழைப்பாடி கந்தனேடுகூடி
ஸந்ததமும்தேடி பாலசுப்ரமண்யம் பாதத்தை நான்பாடி
கோரி சுப்பலக்ஷிமிக்கு யாரும் கெதியில்லை (மர)

61. நானே ஒண்டி என்ற மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை.

பல்லவி.

முருகா நான் என்ன செய்வேன் வேலா நான் என்னசெய்வேன்
தேசிகா குருபரனே என்ஜென்மம் தொலையவேண்டுமே (முரு)

சரணம்.

அரிதான பாபம்செய்து அலைகுறேன் புவிமேல்
நிலைகாணமல் ஒன்றும்வழிதோணமல் கண்டு தெரிசிக்காமல்
சுப்பலக்ஷிமி மனம்நொந்து வாடுகிறேன் (முரு)

62. ஓரடிப்பத மெட்டு

இராகம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

சொல்லாயோ உம்மகிமை நில்லாயோ
எந்தன்—வாக்கினில் (சொ)

அநுபல்லவி.

வல்லவா சூரனே வரந்தந்த ப்ரகாசனே—எல்லை
கண்டு பாடும் ஈசன் முருகேசனே (சொ)

சரணம்.

வந்து மனம் சந்தோஷமாய் சிந்தைதனில் தந்தருள்
வேண்டுமய்யனே அந்தி பகலுமாய் கந்தனே

தியானமாய் ஆனந்தம் கொண்டேனே---தஞ்சமென்று
கெஞ்சிபாதம் அஞ்சிடாமல்—பிடித்தேனே
நெஞ்சிரங்காதோ—சஞ்சலம் கொண்ட சுப்பலக்ஷ்மி
வினை தெண்டம் சமர்ப்பித்தேன் கண்டு மகிழ்ந்திட (சொ)

63. இராகம்-பூரிகல்யாணி.

பல்லவி.

முருகா உந்தன் மீதில் மனம் நாடி உன்னை தேடி (முரு)

அநுபல்லவி.

உருகி உருகி கரைந்து வாடுகிறேன் ஓகோ இனி தாளேன்
உன்னை காணுதுண்ணி வழி வேறு இல்லை (முரு)

சரணம்.

எத்திசைபுகழ் வேலா அன்பர் ஏழையர்க்கநுகூலா
தென்றமிழ் பாடும் சுப்பலக்ஷ்மி தாசர்க்கருள் சிறந்தே மிக
வாஸர்க்கடி பணிந்தோங்கிய (முரு)

64. இராகம்-ஸாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி

176929

வந்து நின்றாடும் மயிலே—எந்தன் முன்னே (வந்)

அநுபல்லவி.

குஞ்சரி மனோகரனே கொந்தளர் குழல் வள்ளியை
சிந்தை மகிழ்ந்து மணந்த சிங்கார வேலனே (வந்)

சரணம்

அரவங்கள் திடுக்கிட்டோடவே கெதி கலங்கி
ஆதிசேஷனும் பாடவே சுந்திரர் பொற்சிலை வீச
தோகை விருது வீச அந்தணர் மலர்கள் சூட
அமரர் கண்டு கொண்டாட வந்த சுப்பலக்ஷ்மியின்
சிந்தை களிக்கச் செய்ய (வந்)

65. கௌரி திரிபுரசுந்தரி என்ற மெட்டு.

இராகம்-பந்துவராளி.

பல்லவி

(826:3417) N2

அய்யனே வரம் தாரும்—மையப்பனே
எனதன்புள்ள வேலனே (அய்)

அநுபல்லவி.

வர்ணமயிலே சரணம் தந்தேனே—தருணம்
கார்த்து என்மேல் கருணை புரியும் (அய்)

சரணம்.

எத்தனை ஜென்மம் எடுத்து இப்படி யேழை—தவிப்பது
நீதியழகாமோ சோதனையோ சுப்பலக்ஷிமி மீதில்
பாபமோ யெந்தன் பக்தர் வாஸனே (அய்)

66. இராகம்-மத்தியமாவதி.

பல்லவி

குஞ்சரி மணவாளன் குமாரகுரு வேலனை இரவும் பகலும்
துதித்தேன் மனமகிழ்ந்து சரணம் தக்ஷணம் காருமே (கு)

சரணம்.

பேதையுள்ள அன்பினில் நீ நனைந்து எந்தன் பீடை
தன்னை ஓட்டுவாய் முருகேசா பீடை தன்னை ஓட்டுவாய்
ஆதி வடிவேலுமாய் அன்புட எந்தன் மீதில் வைத்து
பக்தி சுப்பலக்ஷிமி சக்தி வடிவேலவா (குஞ்)

67. ஓரடிப் பதம் என்ற வர்ண மேட்டு-

இராகம்-அடாணா.

பல்லவி.

எந்த நேரமும் ஆனந்தம் உந்தன் சித்திர
மயிலும் வேலும் கர்த்தனை கைகொண்ட பக்தி (எந்)

சரணம்.

நடந்து போகும் மயிலை தொடர்ந்து தொடர்ந்து கொண்டு
பயந்து வாகனம் கொண்டீரே உமக்கடங்கி தோகை மயிலும்
ரக்கை விரித்துக்கொண்டு பக்கமாய் ஆடிற்றங்கே—கோலா
கலத்துடனே வேலாயுதனைக் கண்டு காலம்—சுப்பலக்ஷிமி
கோலம் இப்படி செய்த வேலன் பரமகுரு—சீலன்
கதிர்வேலனே (எந்)

68. ஆதியந்த யேமிலேது,

இராகம்-தோடி.

பல்லவி.

சக்தி வடிவேலனே எந்தன் பக்தர் ரக்ஷவாஸகனே (சக்)

அநுபல்லவி.

வர்ணமயில் வேலா சரணம் குருபாலா—தருணம்
சந்தடி நீக்கி வரணும் எந்தன் முன்னே (சக்)

சரணம்.

உலகம் புகழும் வேலூர் குமரேசன் உறுதியுடனே—திரும்பி
பார்த்தாரே காரும் கர்த்தனே தாரும் சக்தியை பேதை மனதை
நோகச்செய்யாமல் ஸாது சுப்பலக்ஷிமிக்கி ரீ ரீ ரீ
சந்ததமும் அருள் புரிந்து வந்த வினை தீருமைய்யனே (சக்)

69. மருவி என்ற வர்ண மெட்டு.

இராகம்-ஆனந்த பைரவி.

பல்லவி.

செம்பொன்னே எனதன்பனே—எந்தன்
துன்பம் போக்கிடும் இன்பனே (செ)

அநுபல்லவி.

செந்தமிழை எந்தன் வாக்கில் சந்ததமும் வந்துதிப்பீர் (செ)

சரணம்.

கந்தன் எந்தன் சொந்தம் என்று விந்தையுடன் பாடினேன்
இந்த சுப்பலக்ஷிமியை நிந்திக்காமல் கார்த்திட
பந்த பாசம்தீர்த்தென்னை பாதாரவிந்தத்தில் சேர்க்கும் (செ)

70. ஒருநாள் மருவிய என்ற மெட்டு.

இராகம்-கேதாரகவுளம்.

பல்லவி.

அய்யன் முருகையனே—இன்னமும்
ஜாலம் செய்தால் மெய் எப்போ அருள்வீரோ (அ)

அநுபல்லவி.

திருச்செந்தூர் வேலவரின் செந்தாமரை பாதத்தை
மறு ஜென்மம் எடுக்காமல் மலர் கொண்டு பூஜை செய்ய (அ)

சரணம்.

வருந்தி மனதில் நாடி தெரிந்து புகழ்ந்து பாடி—வாம்
தந்த முருகேசன் நினைந்தவுடன் எந்தனை—அஞ்சிட
வேண்டாமென்று பஞ்சம் பாக்கடித்தார்—சஞ்சலம்

சுப்பலக்ஷிமிஞ்சி பாதம் பிடித்தேன்—சஞ்சீவி போலே
வந்து கெஞ்சும் பேதையைக் காக்க—நெஞ்சில்
வந்துதித்திட்டார் தஞ்ச மென்றடைந்தேனே (அ)

71. நேரமேறு என்ற மெட்டு.

இராகம்-அம்ஸத்வனி.

பல்லவி.

முருகருடைய கிருபையுடைய தருணம்
கண்டு கொண்டேன் (முரு)

அநுபல்லவி.

சரணம் தந்தேனே வருமை தீருமே
குருபரதாஸன் கொங்கலர் பாலனே (முரு)

சரணம்.

அகிலத்தில் பிரகாசம் புவனத்தில் முருகேசன்
அம்பாள் பார்வதி சுதன் கோரி சுப்பலக்ஷிமி—வீரியம்
கைகொண்ட தூரி விடாமலே காரும் கடவுளே (முரு)

72. ஆரேசைய்யா என்ற மெட்டு.

[பார்ஸி.]

சக்தி வடிவேலனே பக்தர்க்கநுகூலனே
முக்தி முருகேசன் (சக்)
சதாகாலம் எந்தன் ஹ்ருதயவாஸன்
சஞ்சலம் தீர்க்கும் நேசன்—பஞ்சம்
போக்கும் ப்ரகாசம் அண்டினவர்க்கு நேசன்
வரம் கைகொண்ட சுப்பலக்ஷிமி—கரம்
வேல் கொண்ட முருகேசனே (சக்)

73. தாரத்தில்லாரா என்ற மெட்டு.

[பார்ஸி.]

குமாரகுரு வேலனே இரவும் பகலுமாக
சரவண பவனே என்று கருணை கொண்டேன் (குமா)
ஜெனன மரணம் போக்கி வரம் தந்தருளுவீரே
சரணம் தந்தேனே தருணம் தீரும் (கு)

பக்தி பரவச்செய்யும் சக்தி வேலாயுதனே—முக்தி
சுப்பலக்ஷிமி வெற்றிபெறவேண்டி துத்யம் செய்தேனே (சு)

74. இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு.

அகிலத்தில் என்னைப்போல அரும்பாவி யாருமில்லை—சக்திவேலா
இந்த புவனத்தில் எந்தனுக்கு போற்றுந்தெய்வம் வேறில்லை—(ச)
இன்பம் போதுமெனக்கு இனியிந்த ஜன்மம் வேண்டாம்—சக்தி
எந்தன் மர்மம் தெரிந்துகழ்ந்து கர்மத்தை போக்குமய்யா—சக்தி
என் பாபம் பரக்கடிக்க பாரும் பன்னிருகையா—சக்திவேலா
சேரும் பாதாரவிந்தம் காரும் கருணையுடன்—சக்திவேலா
ஆதாரவற்றபாவி யாரும் கெதி இல்லையே—சக்திவேலா
நான் கூவும் குரலை உமக்கு பாரமாய் இருக்குதோ—சக்திவேலா
ஓயாத கவலையும் தீராத வருமையும் சக்திவேலா
எந்தன் ஒழியாத விசாரத்தை சரமாய் தொடுத்துபோட்டேன்—(ச)
அறியாமை செய்கையினல் தெரியாமல் புலம்புகிறேன—சக்திவேலா
இனி உருமையாய் ஆள்கொண்டென்னை உந்தன் ப்ரணவமந்திரம்
[ஓதும்—சக்திவேலா
வள்ளிதெய்வானையை விரும்பி மணம் புரிந்த சக்திவேலா
எந்தன் கொள்ளைகொண்ட மனதை உள்ளம் பூரிக்கசெய்வீர்—(ச)
யேகாதசி விருதத்தை எல்லோரும் அனுஷ்டிப்பார்—சக்திவேலா
உந்தன் கந்தசஷ்டி விருதத்தை எந்தனுக்குதந்திடும்—சக்திவேலா
பாக்கியம் பணமும் வேண்டாம்பசியாற உண்ணவேண்டாம்—(சக்)
உம்மை பக்தியுடன் பஜனை செய்து நித்தமும் துதிக்கச்செய்—(சக்)
எந்நேரமும் உந்தன் சந்நிதியில் நிற்பேனே சக்திவேலா
அந்த நேரத்தில் உந்தன் அருள்ஜோதி விளங்குவீர்—சக்திவேலா
இந்த விசாரம் எனக்கெந்த தெய்வம் தந்ததோ சக்திவேலா
அல்லாமல் தந்தைதாயின் குற்றமோ நான்செய்தபாக்கியமோ—(ச)
கந்தன்மேல் பக்திக்கொண்டு எத்தினை பாடினலும்—சக்திவேலா
நித்தம் சுப்பலக்ஷிமிக்கி முக்தி தந்தருளும் அய்யா—சக்திவேலா

75. கருணை சுந்தரனையுடன் என்ற மெட்டு.

இராகம்-காப்பி பியாக்.

பல்லவி.

வேலவனே உம்மை தேடினேன்
நீலமயில் மீதினில் ஜோதியாய் விளங்கும் பாலனே (வே)

சரணம்.

அந்தகரூபம் கொண்டு அலையும் ஜனங்களுக்கு
வந்த வினைகள் போக்கி வரம் தந்தருளுவீரே (வே)
காரும் மனமகிந்து கூறும் கவியைப்பாட
பாரும் சுப்பலக்ஷிமி பரிதாப நிலைமையை (வே)

76. ஜிய்யாதுமை கைலோரே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்.

பல்லவி.

முருகனே உன்னைப் போலே கிருபை வேரில்லை (மு)

சரணம.

நம்பிராஜன் புத்திரி உம்முடைய பத்தினி
மான் வயற்றில் பிறந்த மங்கை வள்ளியை யணைந்த
கோரி சுப்பலக்ஷிமி கொறைந்து பரந்திடாமல்
காரும் பன்னிரு கையனே (மு)

77. இராகம்-நாதநாமகிரியை

கண்ணிகள்

அன்பன் ஆறுமுகனே தேடிநான் அலைகுறேன்
மனம் மிகாவாடி கானவாரி மயிலே—கோரி உம்மை
காணுமல் தேடுகிறேனே பின்னை என்ன சொன்னாலும்
உந்தன் நெஞ்சம் அய்யன் இரங்கவில்லை—மனமிகா
கொஞ்ச சுப்பலக்ஷிமி துயரம் தீரும்—திவ்ய
ஜோதி மயம் எனக்குத் தாரும்

78. இராகம் காப்பி.

கண்ணிகள்.

சக்தி வேலனே நான் நித்தமும் தேடி இத்தனை பாரம்
எப்படி பொறுப்பேன் கந்தனை கண்டதும் சிந்தை மகிழ்ந்தேன்

பந்த பாசங்களும் பஞ்சாய் பறந்தேன் தலையில் இருந்த
ஒரு பெரும்பாரம் தள்ளினது போலே தோணுதின்னேரம்
இந்த வேலனை காண யேகுது துன்பம் எல்லை இல்லாது
பெருகுது இன்பம் காந்தம் இரும்பை கவர்வது போலே
காரும் சுப்பலக்ஷிமி பக்தி உன் மேலே (ச)

79. இராகம்-பியாக்-காப்பி

கண்ணிகள்.

ஆறுமுக வேலனே கோரும் குணவனே
ஈராறு பன்னிரு கையனே (ஆ)
ஜோதி சுப்ரமண்யம் ரூபலாவன்யனே—ஸோதரன்
தங்கையை பாரும் மக்களில்லாதவர்க்கெத்தனை
செல்வம் மலை மலை போலிருந்தாலும் துக்கமல்லாமல்
சுகமென்றென்னாளும் சொல்லவொண்ணுதொருக்காலும்
குழந்தை புகழ்ந்திடும் மதன சொல் ஒன்றனை கூட்டும்
சுருதி வீணையின் ஓசை போல சுப்பலக்ஷிமி—காலம்
தவறாமல் பால முருகேசன் பூஜை (ஆ)

80. இராகம்-நாதநாமகிரியை-ஜம்பை-தாளம்.

கண்ணிகள்.

அய்யனே இந்த விதி எந்தனுக்கு விதிக்கலாமோ சிந்தை நொந்து
வந்த எனக்கு தொந்த வினை தீரும்—சங்கரனும் முன்னொருநாள்
ஸாம்பாவினுடன் கூடி மயானந்தன்னில் நடநித்த
மைந்தனும் நீர் அல்லவோ ஓ ஓ ஓ
வற்றாத கங்கையிலும் வாஸமுள்ள புஷ்பத்திலும்
வீசி படமெடுத்தாடும் தேசிகர் நீரல்லவோ ஓ ஓ ஓ
பக்ஷமுடன் சுப்பலக்ஷிமி இச்சையுடன் உறைத்த தமிழ்
தக்ஷணமே கார்த்தருளும் தயாநிதி நீரல்லவோ ஓ ஓ ஓ

81. பத்தியம்.

வளச்சட்டி வேஷம் கொண்ட வையாபுரி வாசனே
பாசாங்கு செய்து கிழவேஷம் பூண்டு தள்ளாடி தள்ளாடி

திணைக்கொல்லை தேடிவந்து காவல் கார்க்கும் வள்ளியாரை
கண்டுகொண்டார்---பசியாயிருக்குதடி பைங்கிளி வள்ளியம்மா
பசிதீர எந்தனுக்கு இசையாய் கொடுப்பாய்

முடுக்கு.

திணைமாவும்சர்க்கரையும் சேர்த்துக் கொடுத்தாள்—வள்ளி
தண்ணீர் வேணுமென்று தவித்துவிழித்தார்—அள்ளிகொண்டு
தண்ணீரை வள்ளி கொடுத்தாள்—மெள்ள சுப்பலக்ஷிமியும்
அந்தவேளை சிந்தை தனில் பூரித்தாள் ஸந்தோஷமாய்'

82. வந்து வேகுநேரம் என்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம்.

கண்ணிகள்.

ஸர்ப்பனை போலே கர்ப்பனைசெய்து விர்ப்பேனே—உம்மை
தற்காலத்தின் நிலைமை பொறுக்காமல் அச்சில் இயற்றுகிறேன்
பாழான கும்பி ஆழம் நிறைய பரக்குறேன்—பாவி
வேறு வழியும் கெதியும் இல்லாமல் வேலன் கவி செய்தேன்
அந்தி பகலும் நொந்தி புலம்பி என் சிந்தை—வாடுதே
பாடும் சுப்பலக்ஷிமியின் பரிதாபம் தீர்ப்பீர்

83. மருவே சிருத்த என்ற மெட்டு.

திருப்புகழ்-காவடிச்சிந்து.

அருமையுள்ள முருகேசன் அடியார்கட்கு--நேசன்
இந்தப்படிமீதினில் பிரகாசிக்கும் பக்தர் மீதில்—நேசன்
வேலன் எனது பாலன் அன்பரின் கூலன் கதிர் லோலன்
தக்ஷணமே சுப்பலக்ஷிமி ரக்ஷித்தருளும்---சீலன்

84. சரணசம லாலயத்தில் என்ற மெட்டு.

காவடிச்சிந்து.

பசிக்குதென்று வேல்முருகர் பாதிராத்திரி வேளையில்
கவளம் அன்னம் வேணுமென்று கார்த்து இருந்தீரே (ப)
அப்பொழுதே அரிசிகொண்டு அடுப்புமீதில் கொதிக்கும்போது
திடுக்கிட்டென்னை கூவி வேலன் செவியில் உரைத்தாரோ
அடிமை சுப்பலக்ஷிமி நீ யாருக்கும் நீ பயப்படாதே—பாரு
இன்னும் சீக்கிரத்தில் பாதம் அடைவாயே (ப)

85. ஆறுமுகவடிவேலவனே என்ற மெட்டு.

[காவடிச்சிந்து.]

பக்தபரிபால வாஸகனே—எந்தன்
பரிதாபம் தீர்ப்போனே

யுத்த பரிபாலத்தில் சித்திரை கைகொண்ட
சக்தி வடி வேலனே நீதியும் வேதமும் ஓதிய
பேர்க்கு நீ நின்மல ரூபகனே—உம்மைப்
போற்றி துதிசெய்யும் மூத்தவா தம்பியை
பொய்கையடைந்தவனே வையகம் தன்னிலே
மெய்யாகவிளங்கும் பன்னிருகை வாசனே—சாக்ஷி
சுப்பலக்ஷ்மி சரணம் அனுதினம் காரும் கதிர் வேலனே

86. சத்தியபாமா மேலே வாட்டம் என்ற மெட்டு.

வேறு—காவடிச்சிந்து.

பரம கிருபாநிதி பாலா குணசிலா வள்ளி லோலா
எந்தன் பரிதாபம் பார்த்திடும் வேலா பக்தர் மீதில்
சித்தம் வைத்த உத்தமனே முக்தி தாரும்
பாகி தயாநிதி வாசா பாபநாசா முருகேசா—எந்தன்
பாபத்தை நீக்கும் சர்வேசா என்னைபாரும்—வரம்
தாரும் உன்னைக் கோரிவந்த குருநாதனுக்கு
சங்கீத லோலனே வாரும் அருள் தாரும்
கிருபைகூறும் எந்தன் சங்கடங்கள் நீக்க வாரும்
இங்கித குண சிலனே என் வினை போக்கும் மூலன்
நேசன் சுப்பலக்ஷ்மி வாஸன்

87. செந்தின்மாநகர் என்ற மெட்டு.

[காவடிச்சிந்து.]

அலங்காரமாகவே அய்யன் திருவடியைக் கண்ட
கதிர் வேலனைப்பாருமே உம்மை அண்டி வந்தேன்
கவலை தீருமே இந்த மண்டலந்தனில் கண்ட பாபத்தை
நின்று துதித்திட அன்றே பரந்தோடும்
சங்கரா இந்த சம்சார கடலை விட்டு
நேசன் சுப்பலக்ஷ்மியை பாருமே

88. வெண்ணிலாவே என்ற மெட்டு.

[காவடிச்சிந்து.]

சீர்பெருகும் வையகத்தில் செல்வ சிங்காரவேலனே
செந்தமிழ்பாட ஜனங்கள் ஆசித்தார் அவரை
அல்லும் பகலும் பூஜிக்க நேசித்தார் அய்யன்
ஆடலும் பாடலும் ஈடு பெருமல் நாடி சுப்பலக்ஷ்மி
தேடி வாடுகிறாள் பாதம் சரணம்

89. புள்ளிகருத்தமயில்மாதேஎன்ற மெட்டு

[காவடிச்சிந்து.]

கருணை புரிய ஜெகநாதா எந்தன் கருண வருண
குண சீலா நான் சரணம் கோடி செய்தேன்
இத்தருணம் கார்த்திடும் வாஸன் ப்ரகாஸன்
சஞ்சித வினை தன்னை தீரும் மனசஞ்சலம் அறுத்து
என்னை காரும் உன்னை தஞ்சமென்றடைந்தேனே
வஞ்சகம் இனி வேண்டாம் கெஞ்சி மனம் அஞ்சி
யாருக்கும் பயப்படமாட்டேன் உந்தன் இரு
க்யானம் எந்தனுக்கு போட்டும் கேட்டு
காத்திருக்கும் சுப்பலக்ஷிமிக்கு ஊட்டும் க்யானம் பூட்டும்

90. தில்லாலே.

திருத்தணிகை வள்ளியாரை செங்கதிர்வேல் முருகையன்
சேர்ந்து மணம்புரிய தள்ளாமை வேடம் பூண்டு வந்தாரே
அரும் கானகம் காடுதன்னில் சின்னம் சிறு வயதில்
தினைக்கொல்லை காவல் கார்க்கும் சிற்றிடை வள்ளியண்டை
சிங்கார வேலவரும் வந்தாரே பெரும் பசியும் தாகத்தோடு
உண்மை ரூபத்தைக்காட்டி ஒற்றுமையாய் தாலிகட்டி
பற்றிவந்த சுப்பலக்ஷிமி முக்தி அளிக்கவேண்டி
தினந்தோரும் பக்தி உரைத்திடிவீர் (தி)

91. போற்றும் துதி.

[காவடிச்சிந்து.]

சாற்றும் பூஜை ஷண்முகனுக்கு போற்றி செய்தேன்
இரவும் பகலும் போற்றி செய்தேன் வீற்றிருந்த
வள்ளியோடு வேல் முருகர் என்னைக்கண்டு
பெண்மணியே கண் கலங்கி யேனழுதாய்
இந்த பூமியிலெந்தனுக்கு யாருமில்லை என்றுரைத்தேன்
காதியற்ற பாவியென்பார் நாட்டிலென்னை எல்லோரும்
இந்த சப்தம் கேட்டு வேல் முருகர் நடந்து வந்தார்
சிற்றிடையே இத்தனைநாள் யேன் மறந்தாய் பக்தி செய்ய
யேன் மறந்தாய் என்று சொல்லி சித்திரை நிலவு போல
வேல்முருகர் நடந்து வந்தார் என்னைக்கார்க்க பத்தரைமாற்று
தங்கம் போல வேல்முருகர் பாதம் பணிந்தேன்
அஞ்சிடாதே சுப்பலக்ஷிமி கொஞ்சம் கூட இனிமேல்
கொஞ்சம் கூட அருமை இனி நீ எனக்கு பக்திமாதென

92. பல்லவி.

மாதர் வந்தனம் முருகா கோரி தந்தனம் (மா)

அநுபல்லவி.

திருத்தணிகையில் வாசம் செய்யும் செங்கதிர்வேல் முருகனே
தீரனே வீரனே சூரனே வடிவேலனே (மா)

சரணம்.

நிந்தனை வேண்டாம் கந்தனே என் சிந்தையில் வாரும்
அந்தி பகலுமாய் உந்தனை தியானமாய்—வந்த
வினை போக்க சந்தித்தேனே வாரும் வேலனே
வாருமே திருமே சுப்பலக்ஷிமி பார்த்தை (மா)

93. [திருகால சரணம்.]

இராகம்-காம்போதி.

சாமியை யழைத்துவா ஸகியே எந்தன்
சிங்கார வடிவேலனை மங்கை வரசொன்னாளென்று (சா)
தாமசமேன் அன்னமே மாமையல் பெருகுதடி
என்மீதிலென்ன கோபமோ இன்னேரம் கேட்டுவாடி (சா)

பாரில் மதுர வசன மொழிதனைப் பார்
அவர் நடை அழகைபார்—வரும் ஒயிலைப்பார்
ஜொலியைப்பார்—குண மிகுந்த (சா)

எதுக்கித்தனை மோடி செய்கிறார் வடி வேலவர்—என்மேல்
எதுக்கித்தனை மோடி செய்கிறார் கதிர் வேலவருக்கு யார்
செய்த போதனையோ யார் செய்த சூது இதுவோ
நேசம் சுப்பலக்ஷிமி மோசம் வாரமல் கார்க்க (சா)

94. பலமியால பாலாமணி என்ற மெட்டு.

இராகம்-தோடி.

பல்லவி.

வருவீர் முருகையனே நீர்—என்
முக்திக்கும் பக்திக்கும் சுத்தி சக்தி வேலவா (வ)

சரணம்.

அந்தரங்க மந்திரனே சுந்தரியின் தந்திரனே—என்
சிந்தை நொந்து வந்தேனய்யா பந்தபாசம் பொருந்த கந்தா
வீசும் வேலின் தூசிதட்டி கூசாமலே பேசும் அய்யா
நேசன் சுப்பலக்ஷிமியின் தோஷம் போக பூஜிக்கின்றாள் (வ)

95. உனதாசைகொண்டுருகலானேன் என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்.

பல்லவி.

முருகா உந்தனைத் தேடி முகம் வாடி
முருகா உந்தன் மேல் பாடி (மு)

சரணம்.

கிழ வயதினில் செய்த பெரும் வினையறியாமல்
பொருக்காமலின்னும் என்ன வருமோ
சுப்பலக்ஷிமி சகிக்காமல் தஞ்சமென்றேனே யேயே யே (மு)

96. ஈலாகு ணெனுண்டவச்சுனு என்ற மெட்டு.

இராகம்-நாயகி.

பல்லவி.

ஸாமிநாதா சரணம் தந்தேனே
என் ருணத்தைத் தீர்க்க (ஸா

அநுபல்லவி

தங்கம் போலே வள்ளியை விட்டு
தனியாய் மலையில் விளங்கலாமோ (ஸா)

சரணம்.

சன்யாசி போல வேஷம் கொண்டநீர் உல்லாஸமென்ன
வள்ளியுடனே பாபமோ இது பரிகாசமோ
பக்தர் ரக்ஷகரே சுப்பலக்ஷிமி துயரம் நீங்க
கற்பூரதீபம் கண்டுகொண்டேனே வண்டார் குழலாள்
வள்ளியோடு கண்டு மகிழ கருணை செய்வீரே (ஸா

97. மோசமு ஜேசனே என்ற மெட்டு.

இராகம் தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஸாமிநாதனே எந்தன் ஸாமிநாதனே
சக்தி வடிவேலனே எந்தன் (ஸா

சரணம்.

காலாகாலமும் கதிர் வேலனே எந்தன்
கர்மம் போக்கிடும் சீலனே குருநாதா—வாதா
பாதுகார்க்கலாகாதா (ஸா
சஷ்டி திதியில் இஷ்டமுள்ளோனே கஷ்டவினையை
கார்க்கும் ரக்ஷகனே மாது சுப்பலக்ஷிமி
மன மகிழச் செய்யும் (ஸா

98. இராகம்—சுருட்டி

மங்களம் சிங்காரவேல் முருகையனுக்கு மங்களம்
மங்களம் சூர ஸம்காரருக்கு மங்களம்
வள்ளி தெய்வானையை விரும்பி மணந்த வருக்கு மங்களம்

சரணம்.

ஸோதரன் சுப்பலக்ஷிமி சதுர் மறை லோலனுக்கும்
பாசமறுத்திடும் பாலசுப்ரமண்யனுக்கும்
பாரில் ஜனங்களுக்கு பக்தி பரவச்செய்யும் மங்களம்

முற்றிற்று.